2024-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 28-ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பொருள் எண் .1**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் அக்டோபர் 2024 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**தீர்மான எண்.191 நாள்.28.10..2024.**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண். 2**

பள்ளிபாளையம் நகராட்சியில் அக்டோபர் மாதம் **25.10.2024**–ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண். | வரியின விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 0.00 | 228.74 | 0.00 | 92.84 | 0.00 | 135.89 |
| 2. | காலியிட வரி | 2.05 | 4.21 | 1.74 | 1.37 | 0.31 | 2.85 |
| 3. | தொழில்வரி | 0.88 | 18.01 | 0.88 | 6.79 | 0.00 | 11.22 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 0.00 | 71.19 | 0.00 | 27.94 | 0.00 | 43.86 |
| 5 | வரியில்லா இனம் | 0.00 | 18.29 | 0.00 | 9.72 | 0.00 | 8.57 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.00 | 49.35 | 0.00 | 18.97 | 0.00 | 30.37 |
| | **மொத்தம்** | 2.93 | 390.39 | 2.63 | 157.63 | 0.31 | 232.76 |

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/அ1

**தீர்மான எண்.192 நாள். 28.10..2024.**

பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண். 3**

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும், அம்ரூத் 2.0 (2022-2023) திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டப்பணி ரூ.1777.00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்கு திட்ட மதிப்பீட்டில் 45.02 கி.மீ குடிநீர் பகிர்மானக் குழாய் மாற்றியமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது வரை 42.00 கி.மீ நீளத்திற்கு பணி முடிவுற்று தற்போது நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலைகளில் மீதமுள்ள 3.00 கி.மீ நீளத்திற்கு பணி நடைபெற்று வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் மண்சாலைகளாக உள்ள சாலைகளில் குடிநீர் பகிர்மானக்குழாய் பொதுமக்களிடம் இருந்து வரப்பெறும் கோரிக்கைகளின் படி, திட்ட மதிப்பீட்டில் உள்ள 45.00 கி.மீ நீளத்திற்கு அதிகமாக குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கப்பட வேண்டியுள்ளதால், மண்சாலைகளாக உள்ள பகுதிகளில் சுமார் 10 கி.மீ நீளத்திற்கு கூடுதலாக குடிநீர் பகிர்மானக் குழாய் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.31.82 லட்சத்தினை திட்ட ஒதுக்கீடு தொகையான ரூ.1777.00 லட்சம்

மதிப்பீட்டிற்குள்ளாகவே பணிகள் மேற்கொள்ள தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோப்பு எண்.**505/2023/இ1

**தீர்மான எண்.**193 **நாள்.** 28.10.2024.

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண் .4</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் நகராட்சி 3 பள்ளிகள் மற்றும் ஆலாம்பாளையம் பேரூராட்சி பகுதிகளில் உள்ள 6 பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு பயின்று வரும் 1190 பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சர் காலை உணவு திட்டம் M/s.Sapthagiri Catering Service, Erode என்ற ஒப்பந்ததாரர் பெயரில் கடந்த 29.05.2023 தேதியன்று ஒப்பந்தம் போடப்பட்டு காலை உணவு வழங்கப்பட்டு வரப்படுகிறது. தற்போது ஒப்பந்த காலம் அக்டோபர் உடன் முடிவுருவதால் மீண்டும் அதே ஒப்பந்ததாரருக்கு 6 மாத காலத்திற்கு (நவம்பர் 2024 முதல் ஏப்ரல் 2025) நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.** 394/2023/இ1

**தீர்மான எண்.**194 **நாள்.** 28.10..2024.

அனுமதிக்கப்பட்டது

## <u>பொருள் எண்.5</u>

பள்ளிபாளையம் நகராட்சியில் சென்னை கன்னியாகுமரி உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி மற்றும் அம்ரூத் 2.0 குடிநீர் திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளால் நகராட்சிக்கு சொந்தமான பகிர்மானக்குழாய் மற்றும் போர்வெல் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு சாலைகளில் தண்ணீர் அதிகளவில் வெளியேறுகிறது. இதன் காரணமாக நெடுஞ்சாலைத்துறை மற்றும் நகராட்சியால் மேற்கொள்ளப்படவேண்டிய சாலைப்பணிகளில் தொய்வு ஏற்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ள திட்டப்பணிகள் நிறைவடையும் வரை 6 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி உடனுக்குடன் பழுதுகளை சரிசெய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2,90,000/-ஐ குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும், மேலும், தற்போது ஒப்பந்த காலம் அக்டோபர் 2024 உடன் முடிவடைவதால், மீண்டும் அதே ஒப்பந்ததாரருக்கு 3 மாத காலத்திற்கு (நவம்பர் 2024, டிசம்பர் 2024 மற்றும் ஜனவரி 2025) நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். **கோப்பு எண்.** 1309 /2024/இ1

**தீர்மான எண்.**195 **நாள்.** 28.10..2024.

அனுமதிக்கப்பட்டது

## <u>பொருள் எண்.6</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆவாரங்காடு பகுதியில் அமைந்துள்ள நகராட்சி சமுதாயக்கூடத்தில் பைப்லைன் கசிவு மற்றும் மண்டபத்தில் சமையல் செய்வதற்கு தேவையான பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. மேலும் சமுதாயக் கூடத்தில் ஏற்பட்டுள்ள சிறு சிறு பழுதுகள், பராமரிப்பு பணிகள் மற்றும் பாத்திரப் பொருட்கள் வாங்குவதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.5,00,000/-ஐ பொதுநிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**கோப்பு எண்.1365/2024/இ1**

**தீர்மான எண்.196 நாள். 28.10..2024.**

**அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் எண்.7</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட ஆவாரங்காடு பகுதியில் அமைந்துள்ள கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியின் அருகில் உள்ள ஆழ்துளைக் கிணற்றில் இருந்து சின்டெக்ஸ் டேங்க் மூலம் பொதுமக்களுக்கு குடிநீரல்லாத தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்படி சின்டெக்ஸ் பழுதடைந்து குடிநீர் கசிவு ஏற்பட்டு வருவதுடன், அவ்வழியாக அரசு மருத்துவமனைக்கு செல்லும் வாகனங்கள் சாலையில் திரும்புவதற்கு இடையூறாக உள்ளதால், மேற்கண்ட இடத்தில் உள்ள அடித்தளத்துடன் கூடிய சின்டெக்ஸ் டேங்கினை அப்புறப்படுத்தி அவ்விடத்தில் பொதுக்குழாய் அமைத்து பொதுமக்களுக்கு குடிநீரல்லாத தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.25,000/-ஐ குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்.1308/2024/இ1**

**தீர்மான எண்.197 நாள். 28.10..2024.**

**அனுமதிக்கப்பட்டது**

## <u>பொருள் எண்.8</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் கடித ந.க.எண்.2211/2021/பி1 நாள் 10.10.2024 நாளிட்ட கடிதத்தில் திடக்கழிவு மேலண்மை திட்டம் ,பிளாஸ்டிக் கழிவு மேலண்மை , குடிநீர் சிக்கனம் , வரி வசூல் மற்றும் தொற்று நோய்கள் பரவல் மற்றும் தடுப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்வுகளை திருநங்கை வி.என்.ராணி, சிவசக்தி கிராமிய கலைக்குழு கடலூர் என்ற தொண்டு நிறுவனம் மூலம் பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் 19.10.2024 –ந் தேதி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திறுமாறும், நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.5000/– வீதம்செலவினம் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது,.எனவே பள்ளிபாளையம் நகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் மேற்காணும் தொண்டு நிறுவனம் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்திட ஆகும் செலவினம் ரூ.10,000/ஐ தூய்மை இந்தியா திட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக வரப்பெறப்பட்டுள்ள நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அனுமதிக்கலாம்
2. தூய்மை இந்தியா திட்டம் குறித்து விழிப்புணர்வு பணிகளை நகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் நடத்திடவும், நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விழிப்புணர்வு பணிகளை திருநங்கை வி.என்.ராணி, சிவசக்தி கிராமிய கலைக்குழு கடலூர் என்ற தொண்டு நிறுவனம் மூலம் பணிகளை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்

**கோப்பு எண்.1314/2024/எச்1**

**தீர்மான எண்.198 நாள். 28.10..2024.**

அனுமதிக்கப்பட்டது

## <u>பொருள் எண்.9</u>

பள்ளிபாளையம் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 23.10.2024ம் தேதி புதன்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25</u> பள்ளிபாளையம் நகராட்சியில் வார்டு எண் 18 ஆவாரங்காடு அக்னி மாரியம்மன் கோவில் சாலை ரேஷன் கடை முதல் மதுரை வீரன் கோவில் வரை இருபுறமும் மழைநீர் வடிகால் அமைத்தல் | 19,50,000/- | M/s ஆர்.முத்துசாமி & கோ 1/56 ஜி, ஏ.எஸ்.டி.பெட்ரோல் பங்க் அருகில், ஈரோடு பவானி சாலை, சங்ககிரி. | 0.01% குறைவு |
| | | | 1). M/s.R.S.R. கன்ஸ்ட்ரக்ஷன் 77/1, கீழ் திண்டல், கடுத்தன்காட்டு தோட்டம், வி.ஜ.பி.நகர் அருகில், ஈரோடு. | 1.97% கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஆர்.முத்துசாமி & கோ சங்ககிரி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.872/2024/இ1

**தீர்மான எண்.199 நாள். 28.10..2024.**

அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் எண்.10</u>**

பள்ளிபாளையம் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 23.10.2024ம் தேதி புதன்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25</u> பள்ளிபாளையம் நகராட்சியில் வார்டு எண் 1 அங்கன்வாடி மையம் எண் 25 மையத்தின் பெயர் பள்ளிபாளையம் அக்ரஹாரம் பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | 14,80,000/- | M/s ஆர்.முத்துசாமி & கோ 1/56 ஜி, ஏ.எஸ்.டி.பெட்ரோல் பங்க் அருகில், ஈரோடு பவானி சாலை, சங்ககிரி. | 0.03% குறைவு |
| | | | 1). M/s.R.S.R. கன்ஸ்ட்ரக்ஷன் 77/1, கீழ் திண்டல், கடுத்தன்காட்டு தோட்டம், வி.ஜ.பி.நகர் அருகில், ஈரோடு. | 1.97% கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஆர்.முத்துசாமி & கோ, சங்ககிரி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.200 நாள். 28.10.2024.**

**அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

பள்ளிபாளையம் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 23.10.2024ம் தேதி புதன்கிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25** பள்ளிபாளையம் நகராட்சியில் வார்டு எண் 11 முத்துமாரியம்மன் கோவில் வீதியில் சாலை அமைக்க தடுப்பு சுவர் கட்டுதல் | 2,80,000/- | M/s ஆர்.முத்துசாமி & கோ 1/56 ஜி, ஏ.எஸ்.டி.பெட்ரோல் பங்க் அருகில், ஈரோடு பவானி சாலை, சங்ககிரி. | 0.05% குறைவு |
| | | | 1). M/s.R.S.R. கன்ஸ்ட்ரக்ஷன் 77/1, கீழ் திண்டல், கடுத்தன்காட்டு தோட்டம், வி.ஐ.பி.நகர் அருகில், ஈரோடு. | 2.69% கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஆர்.முத்துசாமி & கோ, சங்ககிரி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.872/2024/இ1

**தீர்மான எண்.201 நாள். 28.10..2024.**

அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.12**

பள்ளிபாளையம் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 25.10.2024ம் தேதி வெள்ளிகிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25** பள்ளிபாளையம் நகராட்சியில் வார்டு எண் 2 குளத்துக்காடு 3வது வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணறு அருகில் RCC தூண் அமைத்து HDPE (2000லி) தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 1,60,000/- | கே.எஸ.¦மாரியப்பன், 716பி,குதிரைகல¦மேடு, காடப்பநல்லூர் (P.O), பவானி | -.0.17% குறைவு |
| | | | M/s. எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5-6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 6.82% கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் -0.17% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் கே.எஸ்.மாரியப்பன், பவானி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.202 நாள். 28.10.2024.**

அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.13**

பள்ளிபாளையம் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25 ல் கீழ்கண்ட பணிக்கு 25.10.2024ம் தேதி வெள்ளிகிழமை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2024-25**<br>பள்ளிபாளையம் நகராட்சியில் வார்டு எண் 2 குளத்துக்காடு 6வது வீதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளைக் கிணறு அருகில் RCC தூண் அமைத்து HDPE (2000லி) தொட்டி அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 1,60,000/- | கே.எஸ.மாரியப்பன்,<br>716பி,குதிரைகல.மேடு,<br>காடப்பநல்லூர் (P.O), பவானி | -.0.17%<br>குறைவு |
| | | | M/s. எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன்<br>5-6/327, கே.எஸ் நகர்,<br>பள்ளிபாளையம் | 6.82%<br>கூடுதல் |

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் -0.17% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் கே.எஸ்.மாரியப்பன், பவானி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.872/2024/இ1

**தீர்மான எண்.203 நாள். 28.10..2024.**

அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.14**

பள்ளிபாளையம் பகுதியில் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தின் கீழ் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது. தற்போது இப்பணி நடைபெற்ற சாலைகளில் நகராட்சி சார்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய குடிநீர் பணிகள், பொதுக்கழிப்பிடம் கட்டும் பணி போன்ற பணிகள் நிலுவையில் உள்ளது. மேலும், உயர்மட்ட மேம்பாலப் பணி கட்டும் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளான மழைநீர் வடிகால் இணைக்கும் பணி, மற்றும் உயரத்தை குறைக்கும் பணி, சாலையின் நடுவே வைக்கப்பட்டுள்ள இரும்பு தடுப்புகளை அகற்றி விட்டு அவ்விடத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கும் பணி, திருச்செங்கோடு மற்றும் சங்ககிரி சாலையின் நடுவே வைக்கப்பட்டுள்ள இரும்பு தடுப்புகளை அகற்றும் பணி போன்ற முக்கிய பணிகளை மேற்கொண்டு முடிக்கப்பட்ட பின்னரே பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரருக்கு நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பணிமுடிவறிக்கை வழங்கப்பட வேண்டி நெடுஞ்சாலைத்துறைக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1309/2024/இ1

**தீர்மான எண்.204 நாள். 28.10..2024.**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.15</u>**

பள்ளிபாளையம் நகராட்சி **15**வது மத்திய நிதிக்குழு மானியம் **(15th CFC- Tied Grant) 2024–2025** கீழ் ஒரு எண்ணிக்கையிலான Backhoe loader வாகனம் M/s சூர்யபாலா எர்த் மூவர்ஸ், சேலம் என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டது. மேற்காணும் வாகனம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் குடிநீர் பணிகளுக்காக பயன்பாட்டில் இருந்து வருகிறது. குடிநீர் பணிகளுக்காக பயன்படுத்தப்படும் முன்புற பக்கெட் 1 1/2 அடி அகலம் இருந்தால் மட்டுமே சாலைகள் பலத்த சேதமடையாது. ஆனால் கொள்முதல் செய்யப்பட்ட 2 அடி அகலம் கொண்ட பக்கெட்டில் உள்ள பற்கள் போன்று 1 1/2 அடி அகலம் கொண்ட பக்கெட்டில் பற்கள் இல்லாத காரணத்தினால் அவற்றை தனியாக கொள்முதல் செய்து அதனுடன் இணைக்க ஆகும் செலவினம் ரூ.45000/-ஐ பொதுநிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்**.204/2024/இ1

**தீர்மான எண்.**205 **நாள்.** 28.10.2024.

**அனுமதிக்கப்பட்டது**

**(ஒம்) மோ.செல்வராஜ்,**
**தலைவர்,**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**